# கற்றாழை புதினத்தின் வழி மணிமேகலையின் ஆளுமை

முனைவர் த.புஷ்பராணி
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி - 642001.

**ஆய்வுச்சுருக்கம்**

'குடும்பம்' என்பது மிக உயர்ந்த அர்த்தம் பொருந்திய, புனிதமான, போற்றிப் பாதுகாக்க வேண்டிய அமைப்பாக இருந்தாலும் பெண்ணுக்கு அது நரகமாகிவிடுகிறதெனில், ஒரு மாறாத சிறையாகி விடுகிறதெனில், அதை உடைத்து நொறுக்கி வெளியேறுவது அந்தப் பெண்ணின் முதல் சுதந்திரம் ஆகும். இத்தகைய துணிவு பெண்களுக்கு எளிதில் வராது. ஆனால், இத்தகைய துணிவுமிக்க ஆளுமைப்பெண்ணாக மணிமேகலையை 'கற்றாழை' புதினத்தில் படைத்துள்ளார் சு. தமிழ்ச்செல்வி. இத்தகைய நற்குணம் பெற்ற மணிமேகலை, 'பெண்ணின் முன்னேற்றத்திற்கு ஓர் உரிமைக்குரலாக, பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கும் குரலாக, ஆளுமையை வெளிப்படுத்தி உள்ளாள்' என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** தெத்தம் -தத்துக்கொடுத்தல், இஞ்ச- இங்கு, யாம்-நான், பிரயோசனம்-பயன்.

**முன்னுரை**

இவ்வுலக உயிர்களின் வாழ்வில் அக்கறை கொண்ட, உயிர்களை நேசிக்கின்ற கலைப்படைப்பாளர்கள் தங்களது படைப்புக்களில், அன்றாட வாழ்வில், சமூகச் சூழலில், தமது பார்வையில் அழுத்தம் பெறுகின்ற நிகழ்வுகளையும் செயல்களையும் வாழ்வியல் கூறுகளையும் கலைவடிவமாக்கித் தருகின்றனர். மனிதனின் எல்லையற்ற வாழ்வியல் பொருண்மைகளைத் தாங்கி, சிந்தனையைத் தூண்டி, சமூகமாற்றத்தை ஏற்படுத்தும் படைப்புக்களில் புதினப் படைப்புகள் முக்கிய இடம்பெறுகின்றன. இவ்வகையில் சு.தமிழ்ச்செல்வி தனது 'கற்றாழை' புதினத்தில் இடம்பெற்றுள்ள 'மணிமேகலை' எனும் கதாபாத்திரத்தின் வாயிலாக சமூக வாழ்வியல் அவலங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை வாசகர் மனதில் பதியவைத்துள்ளார். இக்கதாபாத்திரத்தின் வழி சமூக அவலங்களின் மூலங்களையும் விளைவுகளையும் சிந்திக்கச் செய்வதோடு, அவற்றின் வழி சமூக மாற்றத்திற்கு வித்திடுகின்றார். அதாவது தனிமனித, குடும்ப, சமூக நிலைகளில் பெண்களுக்கு உள்ள அநீதிகளைக்களையப் பெண்கள் எத்தகைய ஆளுமைப் பண்போடு திகழவேண்டும் என்பதைச் சமூகத்திற்கு அறிவுறுத்தும் வகையில் இக்கதாபாத்திரம் அமைந்துள்ளது. இத்தகைய பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் உள்ள பெண்களின் ஆளுமை பற்றிய செய்திகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தும்போது அவை பெண் சமூக வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். இதனடிப்படையில் 'மணிமேகலை' கதாபாத்திரத்தின் ஆளுமைப் பண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆளுமை - விளக்கம்**

'பெண்களின் ஆளுமை' என்னும் நிலைப்பாடு, சமூகத்தில் சமபங்குப் பிரதிநிதியாக விளங்கும் பெண்ணினத்தின் இரண்டாம் இடத்தை ஆய்வு நோக்கில் காண்பதாக அமைகிறது. பெண்ணினத்தின் வளர்ச்சிக்குத் தடையேற்படுத்தும் மரபு எனும் சங்கிலியை மறுமதிப்பீடு செய்கிறது. மகளிரின் சிக்கலை ஆராய்ந்து தீர்வுகாண முயல்கிறது. ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்திப் பெண் சமுதாய முன்னேற்றத்திற்கு வித்திடுகிறது. இவ்வுலகில் வாழும் அனைத்து



Scanned with OKEN Scanner

உயிரினங்களிடமும் இயல்பாக அமையப்பெற்றிருக்கும் பண்புகளில் ஒன்றாகும். ஒரு மனிதனுடைய பழக்கங்களும் ஆளுமையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை ஆகும். ஆளுமை மனிதனிடம் காணப்படும் ஒட்டுமொத்த குணங்களின் தொகுப்பாக அமைவது. இத்தகைய ஆளுமையை கொண்டு ஒருவரை அடையாளப்படுத்த முடியும். ஆளுமைத் திறன் என்பது ஒரு மனிதனுடைய குணங்களின் தொகுப்பாகும். ஆளுமை என்னும் தமிழ்ச்சொல் "பர்சனாலிட்டி" எனும் ஆங்கிலச் சொல் குறிக்கும் கருத்துருவைக் குறிக்க ஏற்பட்டது. தன்னைத்தானே ஆள்வதும் பிறரை ஆளும் வல்லமையையும் ஆளுமை எனலாம்.

'ஆளுமை' என்பதற்கான பொருள் விளக்கத்தை திருக்குறள் பல இடங்களில் அறிவிக்கின்றது. சான்றாக, குறள் எண் 382 - இல் துணிச்சல், கருணை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு பண்புகளையும்: குறள் எண் 666 - இன் வழி எச்செயலைச் செய்வதாயினும் மனஉறுதி அவசியம் எனும் ஆளுமையையும்: குறள் எண் 668 - இன் வழி ஏற்றுக்கொண்ட தொழிலை மனம் கலங்காது, காலம் தாழ்த்தாது, சோர்வின்றி முயற்சியுடனும் முழு மனதுடனும் செய்ய வேண்டும் என்றும்: ஆளுமைப் பண்பில் சிறந்து விளங்குபவர்களை உலகம் பாராட்டும் என்பதை குறள் எண் 140 - இன் வழியாகவும்: தலைமைப் பண்பு பற்றி குறள் எண் 517 - லிலும்: சொல் வன்மை உடையவனாக இருத்தல் பற்றி குறள் எண் 647 - லிலும் அறியமுடிகின்றது. மேற்கண்ட ஆளுமைப் பண்புகள் அனைத்தையும் கொண்டுள்ள கதாபாத்திரமாக 'கற்றாழை' புதினத்தில் மணிமேகலை எனும் கதாபாத்திரத்தை படைத்துள்ளார் சு.தமிழ்ச்செல்வி.

**கதைச்சுருக்கம்**

"தெற்கு வடக்காக வளைந்து நெளிந்து நீண்டு கிடந்தது மணிமுத்தா நதி. கோடையில் தண்ணீர் வரத்து நின்றுபோய் இருந்த போதிலும் ஊருணித் தண்ணீரால் மண்ணோடு வேர் பற்றி செழித்துப் படர்ந்து பச்சைப் பசேலென்று கிடந்தது வெங்காயத்தாமரை". (கற்றாழை, ப.13) என்ற புதின வரிகளால் 'கற்றாழை' தாவரம் எவ்வித வறட்சியிலும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறம் வாய்ந்தது. நதியில் இருக்கும் வெங்காயத்தாமரை நதிநீர் வற்றிவிட்டபோதிலும் தனது வேரின் மூலமாக ஊருணி நீரைப்பெற்று, தன்னைக் காத்துக்கொள்கிறது. இந்தக் கற்றாழை, வெங்காயத் தாமரை போன்றே கதையின் நாயகி மணிமேகலையும் தன்னை எந்தச் சூழ்நிலையிலும் தகவமைத்துக் கொள்கிறாள். இவள் பெற்றோர் வீட்டில் பட்ட துன்பம், புகுந்த வீட்டில் கிடைத்த வேதனையான வாழ்வு, மகளின் திருமண முடிவினால் பட்ட வேதனை என்று பல துன்பங்களைக் கொண்டு வாழும் பெண் இக்கதாபாத்திரத்தின் வழி, ஆண் சமூகத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், தொடர்ந்து போராடும் நிலையையும் தங்கள் தேவைகளைத் தாமே நிறைவுசெய்து கொண்டு பெண்ணினம் ஒரு தொகுப்பாக வாழ முற்படுகிற சூழலையும் இதன் வழி வெளிப்படும் பெண்களின் ஆளுமைப் பண்பையும் பதிவுசெய்துள்ளார் படைப்பாளர்.

**மணிமேகலையின் ஆளுமைப் பண்புகள்**

**மனஉறுதி**

'பெண் தனது ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தெளிந்த மனப்பான்மையுடன் செயல்படல் வேண்டும். பொருளாதாரச் சுதந்திரம் பெற முயல வேண்டும் என்பனபோன்ற உயர்ந்த செம்மாந்த குறிக்கோள்களை மனஉறுதி கொண்ட கதாபாத்திரமான 'மணிமேகலை' வழி சமூகத்திற்குச் சுட்டியுள்ளார் படைப்பாளர். மணிமேகலையின் மகள் சத்தியா, 'தான் விரும்பிய நந்தகுமாரையே திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என்று பிடிவாதமாக இருந்து திருமணம் செய்து கொண்டதை மணிமேகலையால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அதை கூறித் தனது தங்கையிடம்



Scanned with OKEN Scanner

பலவாறாகப் புலம்புகின்றாள். அப்பொழுது, மணிமேகலையின் தங்கை வளர்மதி தனக்குள் எண்ணிக்கொள்வதாக இடம்பெற்றுள்ள புதின வரிகள் மணிமேகலையின் மன உறுதியை தெரிவிக்கின்றன. அதாவது, "என்னம்மா இருந்த அக்கா இன்று இப்படியாகிவிட்டதே. தலையில் இடியே விழுந்தாலும் அதை தூசியைப்போல தட்டிவிட்டு வரும் திடமும் துணிச்சலும் உள்ள அக்கா''.(கற்றாழை,ப.18) என்பதால் இதை அறியமுடிகின்றது. இத்துடன், மணிமேகலை ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்தாள்.

அவளது கணவன் செல்வராசு எந்த வேலைக்கும் செல்லமாட்டான். மணிமேகலை வேலைக்குச் சென்று வரும் கூலியில் பங்கு போட்டுக் கொள்வான். நாள்தோறும் அவள் வேலைக்குச் செல்வதற்கு முன் அவனுக்கு பீடிவாங்கி வைத்து விட்டுச் செல்லவேண்டும். அவன் காலையில் சீக்கிரம் எழ மாட்டான் என்பதால் படிக்கையில் அவனது தலைமாட்டில் பீடியை வைத்து விட்டுப்போவாள் மணிமேகலை. ஒருநாள் வேலைக்குச் செல்லும் அவசரத்தில் பீடி வாங்கி வைக்க மறந்துவிட்டாள். அதனால் கோபமடைந்த செல்வராசு, அவள் வீட்டிற்குள் நடக்கும் போது அவள் கால்களுக்கு நடுவில் காலை வைத்து அவளை கீழே விழவைத்தான். இதனால் அவளது கருக்கலைந்து உடல்நிலை சரியில்லாமல் போனது. அவளது தாய் வந்து அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தாள். இத்துடன், "மணிமேகலை கடைசி வரை தன்னை செல்வராசுதான் தட்டிவிட்டு கீழே விழவைத்தான் என்பதை யாரிடமும் சொல்லவில்லை. யாரிடமும் சொல்லி என்ன பிரயோசனம்? செல்வராசு ஒருபோதும் நல்லவனாய் மாறப்போவதில்லை. துயரம் மிகுந்த தன்னுடைய வாழ்க்கையை யாராலும் இனி மாற்றிக் கொடுக்க முடியாதென்று நினைத்தாள். முள் மரங்கள் அடர்ந்த வனத்திற்குள் விடப்பட்டுவிட்டோம். எந்தப்பக்கம் போனாலும் கூரிய முட்கள் குத்திக் கிழிக்கவே செய்யும். விழுந்தாலும் முள்ளில் தான் விழவேண்டும். நடந்தாலும் முள் மீது தான் நடக்க வேண்டும் தெம்பு இருக்கும் வரை நடந்து பார்ப்போம் யாருடைய துணையும் வேண்டாம் யாருடைய பரிவும் நமக்கு வேண்டாம்'' (கற்றாழை, பக்.160,161) என்ற வரிகளால் கணவனால் எத்தகைய துன்பம் வந்த போதும் முடிந்தவரை பொறுத்துக் கொண்டு அதை யாரிடமும் கூறாமல் வாழும் மணிமேகலையின் மன உறுதி வெளிப்படுத்துகின்றது. தொடர்ந்து மணிமேகலையின் பண்பைப் படைப்பாளர் "ஐந்தரை அடி உயரம் உள்ள மணிமேகலை மலையளவு வைராக்கியம் மனதில் கொண்டவளாய் இருந்தாள்'' (கற்றாழை, ப.161) என்று கூறுவதிலிருந்து அவளது மன உறுதியும் ஆளுமையும் வெளிப்படுகின்றது.

மணிமேகலைக்கு பெண் குழந்தை பிறந்த பின்னர் அதை மாரியம்மனுக்கு தத்து கொடுக்க வேண்டும் என்று கூறியதை "அம்மா யாம் பொன்னை மாரியம்மனுக்கு தெத்தம் பண்ணிக் கொடுக்கணும்மா" (கற்றாழை, ப.184) என்ற புதின வரிகள் சுட்டுகின்றன. இதனைத் தொடர்ந்து மணிமேகலைக்கும் அவளது தாய்க்கும் இடையே நடந்த உரையாடலிலும் மணிமேகலையின் மன உறுதி வெளிப்படுத்துவதை "யாம் புள்ளக்கி நான் வேண்டுறதத்தான் செய்யணும்" (கற்றாழை, ப.185) என்பதாலும் "என்னய யார் என்ன பேசுனாலும் பேசிப்புட்டுப் போவட்டும் ஆனால் யாம் புள்ள விஷயத்துல நாஞ் சும்மாயிருக்க மாட்டேன்" (கற்றாழை, ப.186) என்பதாலும் "குடிபோதையில் வந்து என்ன, ஏதுன்னு கொடத் தெரியாம மேலவுழுந்து எழும்பிப் பெயிட்டா மட்டும் போருமா? அதுனாலயே புள்ள அதுக்குச் சொந்தமாயிருமா? இதுக்கெல்லாம் நான் ஒத்துக்கிட மாட்டன். புள்ள எனக்குத்தான் சொந்தம். எனக்கு மட்டும்தான் சொந்தம்" (கற்றாழை,பக்.186,187) என்பதாலும் வரிகளும் மன உறுதி வெளிப்படுகின்றது. மணிமேகலையின் இந்த மன உறுதி பற்றி அவளது தாயே, "அவளுக்கு எவ்வளவு தான் துன்பங்கள் வந்தாலும் அதை சகித்துக் கொண்டு பேசாமல்



Scanned with OKEN Scanner

போய் விடுவாள் திடீரென்று இவ்வளவு வேகசாகமாய்ப் பேச அவளுக்கு எங்கிருந்து வந்தது துணிச்சல்" (கற்றாழை, ப.187) என்று எண்ணி வியப்படைகிறாள். இதைப் படைப்பாளர், "எல்லாம் அந்த சின்னஞ்சிறு குழந்தை கொடுக்கும் தைரியம் தான் என்பது புரிந்தது பூனையின் சீற்றத்தையும் தாய்ப் பசுவின் மூர்க்கத்தையும் தாய்க்கோழியின் ஆவேசத்தையும் பார்த்திருக்கிறாள் பாக்கியம். மணிமேகலையின் வேகமும் அந்த ரகத்தை சேர்ந்தது என்று தோன்றியது அவளுக்கு." (கற்றாழை, ப.187) என்று தனக்கு நேரும் துயரத்தை பொறுத்துக்கொள்ளும் பெண்ணால் தன் மகளுக்கு நேரும் துன்பத்தையும் பிறர் தன்மகள் சார்ந்த செயல்களில் ஆதிக்கம் செலுத்துவதை விரும்பாதவளாக அதை துணிந்து எதிர்ப்பவளாகவும் உள்ளாள். என்பதாலும் அறிய முடிகின்றது. தந்தை என்றால் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும் அங்ஙனமின்றி உரிமையை மட்டும் பெற இயலாது என்று பெண்களுக்கு இருக்க வேண்டிய ஆளுமைப் பண்பை மணிமேகலையின் மன உறுதியான கூற்றுகள் வழி வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

மணிமேகலை தனது மகளின் திருமணம் எதிர்பாராதவிதமாகவும் தன் விருப்பப்படி இல்லாமலும் முடிவாகிய சூழலில் தனக்குத்தானே "இனிமே எதுன்னாலும் வெளில காட்டிக்கிடக் கூடாது. எதுவுமே நம்ம பார்த்து செய்யற எல்லாம் நம்மள மீறி எப்படி எப்படியோ நடக்குது அலயிழுக்குற பக்கம் வல போறமேரி போய் கிட்டே இருப்பம் என்ன நடந்தாலும் நடந்துட்டுப் போவுது' தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்" கற்றாழை, ப.366) என எண்ணிக் கொள்வதாக வந்துள்ள புதின வரிகளால் அவளது மன உறுதி வெளிப்பட்டு நிற்கிறது இத்துடன் "இஞ்சதான் கட்டிக்குடுக்குறன்னு முடிவாயிட்டு இனிமே எதயும் மாத்தப்போறல்ல. நம்மதான் நிதானமா நடந்துக்கிடணும். யாரோட வம்புவழக்கும் நம்பளுக்கு வேண்டாம். முடிவான கல்யாணத்த முடிச்சி வைக்கிற வரைக்கும் என்ன வருத்தமுன்னாலம் பல்லக் கடிச்சிக்கிட்டு பொறுத்துக்கிட வேண்டியதுதான்' மணிமேகலை தனக்குள் வைராக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டாள்" (கற்றாழை, ப.366) இத்தகைய ஆளுமையை வெளிப்படுத்தும் பண்பையே படைப்பின் பலனாக, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் உருவாக்கியுள்ளார் சு.தமிழ்ச்செல்வி. அனைத்துச் சூழல்களிலும் தனக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்று எண்ணாது வரும் பிரச்சினைகளை மன உறுதியுடன் எதிர்கொள்ளும் ஆளுமையை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வரிகள் இவை

## கடமை உணர்வு

இளமைப் பருவத்திலிருந்தே தனக்குரிய கடமைகளைச் சரியாகச் செய்பவளாக மணிமேகலை கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளாள். இதனை "மணிமேகலைக்கும் அவளுடைய அம்மாவுக்கும் ஏதோ வருத்தம். அம்மாவின் மீது கோபித்துக் கொண்டு நேற்று முதல் மணிமேகலை எதுவும் சாப்பிடாமல் கிடந்தாள். எப்போது கோபம் என்றாலும் சோறு திங்காமல் கிடப்பாளே தவிர ஒருபோதும் வேலை செய்யாமல் இருக்க மாட்டாள் கோபமாய் இருக்கும் போதுதான் அவள் இன்னும் கொஞ்சம் வேலை அதிகமாய் செய்வது போல் தோன்றும்" (கற்றாழை, ப.24) என்ற புதின வரிகளில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். இத்துடன், "காற்றடித்துக் கொடுப்பதோடு பஞ்சர் ஒட்டவும் வீல் பெண்டெடுக்கவும் டயர் டியூப் மாற்றவும் மணிமேகலைக்கு சண்முகமே கற்றுக்கொடுத்தான்." (கற்றாழை, ப.38) எனத் தன் தந்தை தனது படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு அவனுடைய குடிகார நண்பர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு படிக்க ஆசைப்பட்ட மகளை பள்ளிக்கு அனுப்பாது அவளுக்கு மிதிவண்டிக் கடை வைத்துக் கொடுத்துத் தனது மதுச்செலவிற்கான பணத்துக்கு ஏற்பாடு செய்கிறான். ஆயினும் மணிமேகலையோ



Scanned with OKEN Scanner

இவ்வேலை செய்ய சம்மதம் இல்லை என்று எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் வேலை செய்கிறாள். ஆக, பெண்கள் தமது கடமையை சரிவர செய்தல் முக்கியம் என்பதும் எனினும் தயக்கமோ பயமோ இன்றித் திறம்பட செய்யும் ஆளுமைப் பண்பு கொண்டவர்களாகவும் பெண்கள் திகழ வேண்டும் என்பதையும் விளக்குவதற்கான சான்றாகிறாள் மணிமேகலை.

## கடும் உழைப்பு

தனக்குரிய வேலைகள் அனைத்தையும் விரைவாகவும் சிறப்பாகவும் செய்யக்கூடிய கடும் உழைப்பு உடையவள் மணிமேகலை. இது, “மணிமேகலையோடு யாராலும் போட்டிபோட்டு புல்லறுக்க முடியாது. புல்லறுக்கப் போய் விட்டால் குனிந்த தலை நிமிராமல் அறுப்பாள்.” (கற்றாழை, ப.39) என்ற புதினவரியால் பெறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, “அவளின் புல்லுக்கட்டை ஆண்கள் கூட எதிர் நின்று வாங்க முடியாது. அப்படி ஒரு சுமை தூக்கும் உறுதியான கழுத்து மணிமேகலைக்கு. ஆளைப் பார்த்தால் அப்படி ஒன்றும் வாட்டசாட்டமாக இருக்க மாட்டாள். வெடுக்கு வெடுக்கென்ற ஒல்லியான உடல்வாகு. சுமாரான உயரம். மாநிறம்.” (கற்றாழை,ப.40) என்பதனால் மணிமேகலையின் கடுமையான உழைப்பும் உடல் தோற்றம் மெலிதெனினும் உள்ளத்தில் உறுதியான ஆளுமை கொண்டவள் என்பதும் பெறப்படுகின்றது.

எந்த வேலையாயினும் காலம் தாழ்த்தாமல் உடனே செய்து முடிக்கக் கூடிய இயல்புடையவள் மணிமேகலை. இதை அவளின் தோழி சுந்தரி உடனான விறகு வெட்டுதல் பற்றிய உரையாடல் வழி அறியமுடிகின்றது. திருமணத்திற்குப் பின்பும் அவளது வாழ்வில் இதே நிலை தொடர்வதை, அவள் கருவுற்று இருக்கும் பொழுது கூட வயல் வேலைக்குச் செல்வது மூலம் அறிய முடிகின்றது. மேற்கண்டவை வழி பெண்களின் திறமைக்கு இந்த ஆணாதிக்க சமுதாயத்தில் எவ்வித பாராட்டும் கிடைப்பதில்லை. ஏனெனில் பெண் என்பவளுக்கு அழகான உடல் அமைப்பு இருந்தால் போதும்: மனம் தேவை இல்லை: அவளிடம் உள்ள எந்த நுண்ணுணர்வுகளுக்கும் விழிப்புணர்வு களுக்கும் எவ்வித மதிப்புமில்லை என்கின்ற நிலையையே பெரும்பாலும் சமூகத்தில் காண முடிகின்றது. இந்நிலையை மாற்ற, பெண்கள் ஆளுமையுடன் விளங்கவேண்டும் என்பதையே மணிமேகலை போன்ற கதாபாத்திரங்களின் வழி தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

## இரக்க குணம்

மணிமேகலை மீது அவளுடைய அக்காவிற்குப் பாசமில்லாத போதும் தன் தங்கையின் மீது மிகுந்த பாசம் கொண்டவளாகவும் அவளது வளர்ச்சியில் அக்கறை கொண்டவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். மணிமேகலை தங்கை மீதான பாசத்தை “வளர்மதியின் அழுகை நின்றும் கூட தேம்பல் நிற்கவில்லை. அவளுடைய கண்களைத் துடைத்துவிட்டாள் மணிமேகலை. தன் மடியிலிருந்த பழங்களை எடுத்து, ‘இஞ்ச பாரு சின்ன மொட்ட ஒனக்கு வாழப்பழம் வச்சிருக்குறன். இந்தா தின்னு' என்று கொடுத்தாள்”. (கற்றாழை,ப.26) என்ற புதின வரிகளால் தங்கை மீதான இரக்க உணர்வு வெளிப்படுகின்றது. இரண்டு நாட்களாக, தான் உணவு உண்ணாமல் பசியுடன் இருக்கும் போதும் கிடைத்த பழத்தைத் தன் தங்கைக்காக எடுத்து வைத்துள்ளாள். இதையும் “வளர்மதியை பல் துலக்கவைப்பது, குளிக்க வைப்பது என இவற்றிலெல்லாம் வழக்கமாய்க் கண்டிப்புக் காட்டுபவள் மணிமேகலைதான்.. நா ஒண்ணும் சொல்ல மாட்டன்.'' (கற்றாழை,ப.26) என இரக்கத்துடன் கூறுகிறாள். தன்னைச் சார்ந்துள்ள, தன்னைவிட இளைஞர்களிடம் அன்பாகவும் இரக்கமாகவும் இருத்தலே ‘பொறுப்புணர்வு' எனும் ஆளுமை என்பது இதன்வழி வெளிப்படுகின்றது.

பின்னாளில், மணிமேகலையின் வாழ்க்கையைப் பங்கு போட்டுக்கொண்ட இந்திரா,



Scanned with OKEN Scanner

சத்தியாவின் திருமணத்தில் தன் உரிமையை நிலைநாட்ட நினைக்க, மணிமேகலை அங்கும் பிறருக்கு விட்டுக் கொடுத்துப் போகும் பெருந்தன்மைமிக்கவளாய் அமைகிறாள். கணவன், வீடு வாசல் அனைத்திற்கும் உரிமை கொண்டாடியவள் இப்போது தன் மகளையும் உரிமை கொண்டாடுவது அவளுக்கு வேதனைதான் என்றாலும் விட்டுத்தருகிறாள். பிறருக்கு உதவும் குணம், இரக்க சுபாவம் மிகுந்தவள் மணிமேகலை. அவளோடு திருப்பூரில் தங்கி வேலை பார்த்த பென்சிலா என்னும் பெண்ணுக்கு அவளது பிரசவ காலத்தில் செலவு பற்றிக்கவலை கொள்ளாது உதவுகிறாள்.

உடனிருக்கும் சிவகாமி என்னும் பெண்ணின் துன்பம் கண்டு மனதிற்கு ஆறுதல் அளிக்கும் தோழியாய் தோள் கொடுக்கிறாள். கனியா, திலகா என்ற ஆண்களால் ஏமாற்றப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு ஒரு தாயின் நிலையில் இருந்து ஆதரவு கூறுகிறாள். சமூகத்தை விட்டு விலகி நிற்கும் நாம் அனைவரும் ஒரு வீட்டு பறவைகளாக வாழ்வோம் என்று புது வாழ்வை வாழ்கிறார்கள் என்ற செய்திகள் அனைத்தும் மணிமேகலை இரக்க குணம் வாய்ந்தது என்பதையும் ஆளுமை பண்பு கொண்டவள் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

**துணிச்சல்**

மணிமேகலை வாழ்வு அவளுடைய தந்தையின் பொறுப்பற்ற செயலால் சீரழிந்த தைப்போலவே மணிமேகலையின் மகளின் வாழ்வும் அவளுடைய தந்தையான செல்வராசுவால் கெடும் சூழல் வரும்போது அதைப் பொறுத்துக் கொள்ளாத மணிமேகலை "யாங் வாழ்க்கைக்குத் தான் எல்லாரும் எமனா இருந்துட்டாவொ யாம் பொண்ணு வாழ்க்கையாவுது நல்லா இருக்கனும்முன்னு ஆசைப்பட்டன்." (கற்றாழை,ப.17) என்கிறாள். இதனால் தன் மகளை தன்னுடன் வைத்துக் கொள்ளாது தன் தாய் வீட்டில் விட்டுவிடுகிறாள் மணிமேகலை. தன் வாழ்வு சீரழிந்ததைப் பொறுத்துக் கொண்ட போதும் தன் மகளின் வாழ்வு சிறப்புற அமைய வேண்டும் என்பதற்காக மகளைப் பிரிந்து வாழத்துணியும் ஆளுமைமிக்க பெண்ணாக மணிமேகலை படைக்கப்பட்டுள்ளாள். "ஆண் துணையின்றித் தன் மகள் திருமணத்தை நடத்த வேண்டும் என்று திருப்பூரில் இருந்து கிளம்பினாள் மணிமேகலை." (கற்றாழை,ப.364) என்று மணிமேகலையின் துணிச்சலை கூறியுள்ளார் ஆசிரியர்.

பணத்தைவிட நல்ல துணையே வாழ்க்கைக்கு முக்கியம் என்பதை உணர்ந்த பாயம்மாள் என்னும் பெண் மணிமேகலையுடன் இணைந்து வாழ்கிறாள்: திருமணத்திற்குத் தகுதியில்லாத ஆனால் ஏமாற்றித் திருமணம் செய்யப்பட்டு கணவன் இறந்த நிலையில் தனிமையில் விடப்பட்ட சிவகாமி அம்மாள் திருப்பூரில் மணிமேகலை வேலை செய்யும் கம்பெனியில் சேர்ந்து அவள் தோழியாகிறாள்: கார்த்தி என்னும் ஆணால் காதலித்துக் கைவிடப்பட்ட பெண் பென்சிலா: கண்ணன் என்பவனால் ஏமாற்றப்பட்ட திலகா: கனியா என்னும் தெருக்கூத்தாடும் பெண் இவர்கள் அனைவரும் மணிமேகலை தங்கியிருந்த காம்பவுண்டில் குடியிருந்த பெண்களாவர். இவர்கள் அனைவரும் வெவ்வேறு சூழல்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்றாலும் அனைத்து பெண்களின் கதைமுடிவும் துன்பமானதாக அமைகிறது. அவர்களின் குடும்பம் பாதிக்கப்பட்ட பெண்களின் கூட்டுக் குடும்ப வாழ்வாக அமைகிறது. அனைத்துக் கதைகளின் மையமும் ஆண்களால் கைவிடப்படுதல்தான். இத்தகைய பல பெண்களுக்கும் தான் ஒரு தலைவி போல் அமைந்து ஒழுக்கநெறி தவறாமல் வாழும் ஆளுமைகொண்ட பெண்ணாக விளங்குகிறாள் மணிமேகலை.

இவள்வழி, பெண்களால் தனித்து இயங்க முடியும்: ஆண்களால் பாதிக்கப்பட்ட,



Scanned with OKEN Scanner

ஆண்களால் ஒடுக்கப்பட்ட பெண்கள் பலர் ஒன்றிணைந்து ஒரு தொகுப்பாக வாழஇயலுகின்ற ஆளுமைப் பண்பு கொண்டவர்களாக நடப்பியல் பெண்கள் திகழ வேண்டும் என்பதை ஆசிரியர் இதன்வழி சமூகத்திற்கு உணர்த்தியுள்ளார். பெண் ஆணின் மீதான சபலங்களுக்கு இடம் கொடுக்கிறபோது பெண்ணடிமை நிலையை மாற்ற இயலாது. பிறர் தன் மீது அனுதாபம் கொள்வதை அவள் விரும்பக் கூடாது. ஏனெனில் அவள் உடல், மன அளவில் ஆணுக்குச் சரிசமமானவள்தான். கர்ப்ப காலங்களில் கூட அவளால் கடுமையாக வேலை செய்யமுடியும். இதற்குச் சான்றாக மணிமேகலை கதாபாத்திரம் அமைகிறது. இதன் வாயிலாக பெண் தன்னை ஒருபோதும் அடிமையாக உணரவேகூடாது: அப்போதுதான் பெண் சுதந்திரம் சாத்தியமாகும் என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர். சிறுவயதில் கல்வி கற்க வீட்டில் மறுத்தபோது கல்வியின் மீது கொண்ட ஆர்வத்தால் மணிமேகலை செய்த துணிகரச்செயலை, "நம்ம அளுவுறத்தப் பாத்தாக்க குடி போதயில இருக்கிற அப்பாவுக்கு எரக்கம் வந்துரும். அக்காவ ரெண்டு தட்டுத்தட்டி அடக்கி வச்சிட்டு நம்மள நாளயிலேருந்து பள்ளிக்கொடத்துக்குப் போவச்சொல்லும் என்று எண்ணமிட்டவளாக சாராயக்கடையை நெருங்கினாள். (கற்றாழை,ப.35) என்பதுடன், "அப்பா நான் பள்ளிக்கொடம் போவனும்: அக்காவும் அம்மாவும் இனிமே பள்ளிக்கொடமே போக்குடான்னுட்டு: நாஞ் சொல்லுறன் நீ போவலாம் போ: நீ வந்து அம்மாக் சொல்லுறியாப்பா: சொல்லுறன்: இப்பயே வாப்பா வூட்டுக்குப் போவம்: நீ போ நான் அப்பறமா வாறன்" (கற்றாழை,ப.36) என்பதுமான தந்தை,மகள் இடையேயான உரையாடல் வழி சிறுவயதிலேயே மணிமேகலை கொண்டிருந்த ஆளுமையை விளக்குவதாக உள்ளது.

## நல்லொழுக்கம்

"ஒரு பெண் எப்போது அவளது நோக்கத்தை உயர்ந்த நோக்கமாக வைத்துக் கொள்கிறாளோ, அப்போது சமூகத்தில் பெண்ணை மதித்துப் போற்றும் தன்மை தானாக வந்துவிடும்.. பெண்ணுக்கும் மனம் இருக்கிறது. இதயம் இருக்கிறது. புத்தி இருக்கிறது என்பதை ஒவ்வொரு செயலிலும் அவள் வெளிக்காட்ட வேண்டும். அப்படியிருந்தால்தான் அவள் வளர்வதற்கு வாய்ப்பிருக்கும்." (சத்குரு ஜக்கி வாசுதேவ், பெண் இறைமையின் மறுபக்கம்,ப. 11) என்று குறிப்பிடுவது போல, சு.தமிழ்ச்செல்வி படைத்த மணிமேகலை கதாபாத்திரம் உயர்ந்த நோக்கம் உடையவளாக, தனித்தன்மை வாய்ந்தவளாகப் பெண்ணினத்தின் உயரிய நோக்கத்தைப் பறைசாற்றுபவளாக அமைகின்றமையை அறியமுடிகின்றது. இவ்வாறு பெண் தன் வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசிரியரின் ஆசை இங்கே வெளிப்படுகிறது.

தன் அத்தைமகள் மீது ஆசையிருந்தும் தன் குடும்பத்தார் அவமானப்படக் கூடாது என்பதற்காகத் தன் காதலைத் தியாகம் செய்யும் செம்மைப்பாத்திரம். அவளை மணந்துகொள்ளக் கூறிய தங்கையிடம் "ஒன் நாத்துனா ஒடட்டாளாமுல்லன்னு பாக்குறவனெல்லாம் அம்மா கிட்ட கேவலமா கேட்டானொளாம். இனிமே ஒம்மவளும் ஒடட்டாளாமுல்லனு கேக்கனுமா? நம் அம்மா உசுரோட இருக்கனுமுங்குறியா, வேண்டாங்குறியா"(கற்றாழை,ப.102) என்று தன் விருப்பப்படி வாழ்ந்தால் குடும்பம் பாதிக்குமே என்ற மனசாட்சி உணர்வு எனும் நல்லொழுக்கம் அவளிடம் இருக்கிறது. மனசாட்சியை மனப்பேயிடமிருந்து மீட்பதில் வல்லமை பொருந்திய பாத்திரம் மணிமேகலையுடையது. "மனசாட்சி தெய்வீக ஒளி நிறைந்தது. உண்மை எங்கிருந்தாலும் அதை உடனே இனங்கண்டு அதன் பக்கம் சார்ந்து விளங்குகின்ற தெளிவும் படைத்தது மனசாட்சி." (திருலோக சீதாராம், இலக்கியப்படகு, ப.36) இத்தகைய சிறந்த மனசாட்சி உடையவள் மணிமேகலை. மணிமேகலையின் கணவன் செல்வராக மதுப்பழக்கத்திற்கு அடிமையானவன். இத்துடன், தனது குடும்பத்தின் மீது

எவ்விதப்பொறுப்பும் இல்லாது, தான் தோன்றியாய் மனைவியை அடக்கி வாழும் ஆண் வர்க்கத்தின் அடையாளம். இவன் மணிமேகலையை விட்டுவிட்டு இந்திரா என்ற பெண்ணை மணந்து கொண்டு சில காலம் வெளியூரில் இருந்தான். பின்பு வீட்டிற்கே அழைத்து வருகிறான். இந்திரா மணிமேகலையிடம் வந்து இருவரும் ஒன்றாகக் குடித்தனம் நடத்தலாம் என்று கூறி மணிமேகலையை அழைத்தபோது, "நீ கூப்புட்டு நான் வந்து ஒங்ககொட ஒண்டிக்கிட்டுப் புருசனப் பங்குபோட்டு வாழுற ஆசை எல்லாம் எனக்கில்ல ஒன் புருசன் அவ்வொருக்குச் சொந்தமான வூடுவாச நீங்களே இருந்துட்டுப் போங்க." (கற்றாழை, ப.266) எனக் கூறுகிறாள். இதன்வழி இந்த அற்ப வாழ்வே தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு விலகிச்செல்லும் ஆளுமை மிக்க பெண்ணாக மணிமேகலையைப் புதின ஆசிரியர் படைத்துள்ளார். மணிமேகலையின் கணவன் மறுமணம் செய்தபின், அவளின் அத்தை மகனைத் திருமணம் செய்துகொள்ள மீண்டும் வாய்ப்பு வந்தது. அவளின் அத்தை செகதாம்பாள் இதைக் கூறியபோது, அதற்கான பதிலாக, "நீங்க இப்புடி நிக்கிறது போறாதா, நானுமா நாசமாப் போவணும்"(கற்றாழை,ப.146) என்று கூறினாள். இதுவும் அவளது நல்லொழுக்கத்திற்குச் சான்று.

மணிமேகலையின் கணவன் செல்வராசு திருடியதற்காகப் பஞ்சாயத்துக் கூடியபோது மணிமேகலை, "என்ன வேணுமுன்னாலும் செஞ்சிக்கிடுங்க... நான் எதுவும் வருத்தப்பட மாட்டன் இல்லன்னா நான் என்ன செய்யணுமுன்னு சொல்லுங்க, செய்யிறன். யாம் புருசன் செஞ்ச தப்ப கண்ணால பாத்துக்கிட்டே நாம் பேசாம படுத்திருந்ததுக்காவ எனக்கும் என்ன தண்டனை குடுத்தாலும் குடுங்க. நான் ஏத்துக்கிர்றன்" என்று பஞ்சாயத்தார் முன் தலை கவிழ்ந்து நின்றாள். (கற்றாழை,ப. 244) என்ற வரிகளும் தான் தவறு செய்யவில்லை எனினும் தன் கணவன் செய்த தவறை மறைக்காமல் அவன் தவறுக்குத் தான தண்டனை பெறமுனைந்ததும் அவளது நல்லொழுக்கத்திற்குச் சான்றாகிறது.

## பொறுமை

முற்காலத்திலிருந்த பெண் உயர்வுநிலை மாறி, காலப்போக்கில் பெண்ணைத் தனது சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு அடிமையாக்கி விட்ட நிலையைக் கண்கூடாக இன்று காணமுடிகின்றது. இத்தகு சமுதாய நிலையைக் குறித்து, "இன்று பண்டைய பெருமைகளைப் பேசி முழக்கும் பாரத சமுதாயத்தில் பெண்மை விளம்பரச்சரக்காக கடைவீதி மலிவுச்சரக்காகச் சீரழிகிறது.. இன்று நாகரிக போதையில் நடமாடும் பெண்கள் உயர்ந்த நிலையை எய்த சிந்தனை செய்யவேண்டும்." (மேற்கோள்: வே. சபாநாயகம்,கணையாழிக் களஞ்சியம்,ப.352) என்று ராஜம்கிருஷ்ணன் குறிப்பிடுகிறார். இத்தகு உயர்வான சிந்தனைகளையே சு. தமிழ்ச்செல்வி தனது புதினத்தில் மணிமேகலை கதாபாத்திரம் வழி காட்டுகிறார். தனக்கென ஒருவழி தோன்றும் வரை அவள் காத்து நிற்கிறாள். குடிகாரத் தந்தையால் கொடுமைக்காரனுக்கு வாழ்க்கைப் படுகிறாள். அவனிடம் அடிபட்டும் உதைபட்டும் பொறுமையாக அவனோடு வாழ்கிறாள். "நல்ல முறையிலே கடமையுணர்ந்து தெளிவான அறிவோடு வைராக்கியம் கொண்டால், அதை அந்தப் பொறுமையின்றிச் சினம் கொண்டால் வைராக்கியமே அழிந்துவிடும். பொறுமையினால் சிந்திக்கும் ஆற்றல் பெருகுகிறது. ஏற்றுக்கொண்ட வைராக்கியத்தை முடிப்பதற்கு வழிமுறை தெரிகின்றது." (யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, மனவளக்கலை, ப.138) இத்தகைய பொறுமையைக் கைகொள்பளாக மணிமேகலை படைக்கப்பட்டுள்ளாள்.

## தொகுப்புரை

மணிமேகலை பெண்ணினத்தின் நல்ல விளைச்சலாக, உழைப்பு, போராட்டம், தியாகம், துணிச்சல், புதிய பண்பாடு, நிமிர்ந்த நடை,



Scanned with OKEN Scanner

அஞ்சாமை, வீரம் என அனைத்து நிலைகளிலும் தன் ஆளுமையை வெளிப்படுத்தி விளங்கும் பெண்மணியாக, பெண்ணினத்தை ஒரு புதிய வெளிச்சத்தை நோக்கி நகர்த்தும் தாயாக, புதிய வித்தாக அமைகின்ற தன்மையை கற்றாழை புதினம் வழி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

சு.தமிழ்ச்செல்வி படைத்துள்ள மணிமேகலை கதாபாத்திரத்தின் ஆளுமைப் பண்புகள் இருட்டில் உழலும் பெண்களுக்கும் வெளிச்சத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் வெளிச்சத்தை நோக்கி நடக்கும் பெண்களுக்கும் தங்கள் வலிமையை உணர்ந்து அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டும் என எண்ணும் பெண்களுக்கும் வழிகாட்டவனவாக உள்ளன என்பது இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது.

## பயன்பட்ட நூல்கள்


1. தமிழ்ச்செல்வி. சு., கற்றாழை, மருதா பதிப்பகம்,226 (188), பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை, முதல் பதிப்பு - 2005.
2. பரிமேலழகர் உரை,திருக்குறள், ராம் பிரசுரம், 18 (171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை, முதல் பதிப்பு - 2003.
3. வாசுதேவ்(சத்குரு). ஜகி.,பெண் இறைமையின் மறுபக்கம் ஈஷா அறக்கட்டளை, சிங்காநல்லூர் கோவை -5. முதற்பதிப்பு -2006.
4. திருலோக சீதாராம், இலக்கியப்படகு, கலைஞன் பதிப்பகம், தி.நகர்.சென்னை-17.
5. சபாநாயகம், வே., (தொ.ஆ.),கணையாழி களஞ்சியம், கலைஞன் பதிப்பகம், தி.நகர், சென்னை-17.


❑❑❑